மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

2019 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 08ம் நாள் வெள்ளிக் கிழமை

1873ம் ஆண்டு 10ஆவது ஏற்பாட்டின்படி திரு. பி.பாலாஜி, இளநிலை உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

அசல் வழக்கு எண். 293/2017 (பழைய எண்.307/2002) என்பவரின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | .. அருள் | வயது | .. |
| த/பெ. | .. | சாதி | .. |
| கிராமம் | .. | சமயம் | .. |
| தாலுக்கா | .. | தொழில் | .. |

08.02.2019 - வா.சா.1 குறுக்கு விசாரணை.

நான் என்ன படித்திருக்கிறேன் என்றால் எம்.ஏ. வரை படித்துள்ளேன். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் குமிடிப்பூண்டி விவேகானந்தா உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியராக பணிபுரிகிறேன். எந்த வகுப்பிற்கு பாடம் எடுக்கிறேன் என்றால் 9 மற்றும் 10. தாவா சொத்து பூர்வீக சொத்து என்றால் சரிதான். எனக்கு திருமணம் நடைபெற்றதா என்றால் நடைபெற்றது. என்னுடைய மாமனார் அரசு நிலஅளவையாராக இருந்து பணி ஓய்வு பெற்றார் என்றால் சரிதான். தாவா சொத்து எங்களுக்கு எப்படி வந்தது என்றால் என்னுடைய பாட்டி வழி சொத்து. தற்போது எங்கு வசிக்கிறேன் என்றால் பொன்னேரி வட்டம், ஆண்டார் குப்பம் கிராமத்தில் வசிக்கிறேன். எவ்வளவு நாட்களாக அங்கு வசிக்கிறேன் என்றால் 10 வருடங்களுக்கு மேலாக அங்கு குடும்பத்துடன் வசிக்கிறேன். என் தகப்பனார் உயிருடன் இருக்கிறாரா என்றால் இல்லை. தற்போது எனக்கு என்ன வயது என்றால் 49. பிரதிவாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

ஓம்./-வே.ஜெகன்னாதன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
போளூர்.